DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.283 /2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.5 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பத்ரா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 18.02.2025.

முதல் விசாரணை

1. நான் தற்போது தாராபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலரக பணியில் இருந்த போது கடந்த 21.04. 2022 ம்தேதியன்று உடுமலை மாரியம்மன் கோவில் தேர் திருவிழா நடைபெறறது. தேர் திருவிழாவின் போது தேர்த்திருவிழா பாதுகாப்பு பணியில் உதவி ஆய்வளார் சரவணக்குமார தலைமை காவலர்சேகர் முதல் நிலை காவலர் கோவிநதராஜ் ஆகியோருடம் பணியில் இருந்தோம். அப்போது தேரானது தளி ரோடு சித்தி விநாயகர் கோவில் தலைகொண்டம்மன் கோவில் வழியாக சென்ற போது நாங்களும் பாதுகாப்பு பணியில் போனோம்.

2. அப்போது பொள்ளாச்சி ரோடு கொல்லம்பட்டறை அருகே தேர் வந்த போது இந்து முன்னணி சேர்ந்த மாவட்ட செயலாளர் பப்பீஸ் தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் ஆகியோர் இந்து முன்னணியின் தான் இந்து முன்னணி நாள் தான் தேரை இழுக்க வேண்டும் அவர்களுக்கு தான் உரிமை உள்ளது என்று கூறினார்கள். அதற்கு பக்தர்களும் சத்தம்போட

அங்கிருந்து சென்று விட்டனர் மேலும் தேர் இரவு 9.5 0 மணிக்கு நிலை நிறுத்த வந்த போது பப்பீஸ் மற்றும் நவின் என்பவர்கள் இடையூறாக நின்று கொண்டு பிரச்சைன செய்தனர் அதை கேட்ட வந்த உதவி ஆய்வாளரை பணி செய்ய விடாமல பெண்கள் மற்றும குழந்தைகளுக்கு இடையூறாக இருந்தார்கள். இது சம்பந்தமாஉ தவி ஆய்வாளர் சரவணகுமார் பாதுகாப்பு அலுவல் முடித்து சென்று தனி அறிக்கையாக புகார் கொடுத்தார். சம்பத்குமார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து காவல் ஆய்வாளர் வசம் ஒப்புவித்தார். காவல் ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அன்றைய தினம் எத்ததனை மணிக்கு பணி தொடங்கி பணி முடிந்தது என்றால் பணி முடிய இரவு 11.00 மணி ஆனது. அன்றைய தினம் உங்கள நாடகுறிப்பில் பணி சம்பந்தமாக எழுதி உள்ளிர்களா என்றால் ஆமாம். பொதுவாக தேர்திருவிழா, மறியல் போராட்டம், கூட்டத்தின்போது வீடியோகவரேஜ் செய்வது வழக்கம் என்றால் சரிதான். தேரின் முன்பு பின்பும் தனியார் தொலைகாட்சி சார்பாக வீடியோ எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. குறிப்பாக எந்த பகுதியில் உங்களுக்கு பணி அமர்த்த பட்டது என்றால் தேரின் முன்பு. உங்களுடன் எத்தனை காவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள் என்றால் சுமார் 80 பேர்க்கு மேற்பட்ட காவலர்கள், அதிகாரிகள். தேர் திருவிழா காலை முதல் மாலை வரை முற்றிலும் போக்குவரத்து அடைக்கப்பட்டது என்றால் நிலை நிறுத்தும் வரை அடைக்கப்பட்டிருந்தது. தேர் திருவிழாவின் போது பகதர்கள், பெண்கள், குழந்தைகள் எதிரிகள் இடையூறு ஏற்படுத்தியதாக எதிரிகள் மீது யாரும் புகார் தரவில்லை என்றால் ஆமாம்.

3. அன்றைய தினம் பப்பீஸ் அவர்களுக்கு போடப்பட்ட GUN மேன் மற்றும் அவரின் பணியின் நிலைய பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தேர் ஜாமியப்பள்ளி வாசல் மற்றும பூர்வீக பள்ளி வாசல் வழியாக செல்லும் என்றால் சரிதான். தேர் வடம் புடிக்கும் போது இந்து முன்னணி மாநிலம் மாவட்ட அதிகாரிகளுக்கு முதல் மரியாதை அளித்த பின்னிட்டு தேர் இழுப்பார்கள் என்றால அது பற்றி தெரியாது.

4. அன்றைய தினம் அவர்களுக்கு முதல் மரியாதை அளிக்கப்பட்டது தெரியுமா என்றால் அது சம்பந்தமாக தெரியாது. சாலை மறியல் போராட்டம் நடந்தால் போலிசார் அவர்களை கைது செய்து தக்கநடவடிக்கை எடுகக வேண்டும் என்பது வழக்கம் என்றால் சரிதான். அன்றைய தினம் எதிரிகள் போலிசாரால் கைது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் கைது செய்த முற்படும போது பணி செய்ய விடாமல் தடுததல் உதவி ஆய்வாளர்

தனியாக புகார் கொடுத்தார்.

5. அன்றைய தினம் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகள் பணி செய்ய விடாமல் இருந்தது இல்லை என்றாலும் அதனால் தான் கைது நடவடிக்கை எடுககவில்லை என்றாலும் சரியல்ல. பப்பீஸ் பள்ளி வாசசல் இருப்பதால் தேர் முன் வர கூடாது என்று சொன்னதால் ஏன் வரகூடாது என்று கேட்டதற்கு தனி அறிக்கைதாக்கல் செய்துபோடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. சம்பவ இடமான சொல்லப்படும் இடம் பொள்ளாச்சி மெயின் ரோட்டின் மேல் என்றால் சரிதான். பொள்ளாச்சி மெயின் ரோடு சுமார் 6 கிமீ நீளமுடையது என்றால் சரிதான். உதவி ஆய்வளார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழககிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.